# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆவணி 2, திருவள்ளுவர் ஆண்டு–2052

## 2021 ஆகஸ்ட் 18, புதன்கிழமை

*சென்னை–600 002, வாலாஜா சாலை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், கலைவாணர் அரங்கம், மூன்றாவது தளத்தில் உள்ள பல்வகை கூட்டரங்கத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"உழுவார் உலகத்தார்க் காணியஃ தாற்றா*
*தெழுவாரை எல்லாம் பொறுத்து."*

*பல்வேறு தொழில் புரிகின்ற மக்களின் பசி போக்கிடும் தொழிலாக உழவுத் தொழில் இருப்பதால் அதுவே உலகத்தாரைத் தாங்கி நிற்கும் அச்சாணி எனப்படும்.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

## 1. தகவல் கோரல்

### கொடநாடு கொலை, கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பான நீதிமன்ற வழக்கு, விசாரணை நடைபெறுவது குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2021 ... (குறுக்கீடு) சொல்லுங்கள்.*

**திரு. எடப்பாடி K. பழனிசாமி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இது நடந்து முடிந்தது. (குறுக்கீடு) ஒரு வார்த்தை கேளுங்கள். (குறுக்கீடு) இதை உள்வாங்கிவிட்டுச் சொல்லுங்கள். (குறுக்கீடு)*

**திரு. எடப்பாடி K. பழனிசாமி:** **

---

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் இதுசம்பந்தமாக என்னிடம் எந்த அனுமதியும் கேட்கவில்லை. இருந்தாலும், நீங்கள் உங்களுடைய கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். இது நடந்து முடிந்த சம்பவம். (குறுக்கீடு)*

**திரு. எடப்பாடி K. பழனிசாமி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், கவனத்திற்குச் சொல்லிவிட்டீர்கள். ரொம்ப சந்தோஷம். நான் தெரிந்துகொண்டேன். நீங்கள் கவன ஈர்ப்புத் தீர்மானமாக எழுதித் தந்தீர்களென்றால், நாங்கள் அதைத் துறைக்கு அனுப்புகிறோம்.*

**திரு. எடப்பாடி K. பழனிசாமி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் (குறுக்கீடு) நீங்கள் இப்பொழுது சொல்கின்ற வார்த்தைகள் எல்லாமே அவைக் குறிப்பில் ஏறாது. மாண்புமிகு முதல்வர் அவர்கள். (குறுக்கீடுகள்) அவைக் குறிப்பில் இதெல்லாம் ஏறாது. மாண்புமிகு முதல்வர் அவர்கள், பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், 'எங்கப்பன் குதிருக்குள் இல்லை' என்கிற அடிப்படையிலே பேசி, இங்கே ஒரு பிரச்சினையைக் கிளப்பியிருக்கிறார். (குறுக்கீடுகள்) அதற்கு பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு எனக்கு இருக்கிறது. (குறுக்கீடுகள்)*

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், "பொய் வழக்குப் போடும் தி.மு.க. அரசைக் கண்டிக்கிறோம்" என்று குறிப்பிடப்பட்டிருந்த பதாகைகளைக் காண்பித்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *என்னுடைய அனுமதி இல்லாமல் நீங்கள் எதையும் காட்டக் கூடாது. (குறுக்கீடுகள்) நீங்கள் இந்த அவைக்குக் களங்கம் ஏற்படுத்துகின்றவண்ணம் முறைகேடாகப் பதாகைகளை உள்ளே கொண்டு வந்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் என்னிடம் எந்த அனுமதியும் பெறவில்லை.*

---

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

*2021 ஆகஸ்ட் 18]* [பேரவைத் தலைவர்]

*(குறுக்கீடுகள்) அனுமதி பெறாமல் நீங்கள் இதையெல்லாம் பேசுவது தவறு. (குறுக்கீடுகள்) நீங்கள் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதில் சொல்கிறார்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசியது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடுகள்) நீங்கள் என்னிடம் அனுமதி வாங்கவில்லை. (குறுக்கீடுகள்) சட்டப் பேரவைத் தலைவர் நான் நிற்கும்போது எல்லோரும் உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்) முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் எழுந்தால் நீங்கள் உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதல்வர் அவர்கள்.*

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளியேறினர்.)*

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'எங்கப்பன் குதிருக்குள் இல்லை' என்பதை நிரூபித்துவிட்டு, இங்கேயிருந்து வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கொடநாடு கொலை, கொள்ளை விசாரணையைப் பொறுத்தமட்டிலே, தேர்தல் காலத்திலே கொடுத்திருந்த வாக்குறுதியைத்தான் இப்போது இந்த அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறதே தவிர, வேறல்ல. (மேசையைத் தட்டும் ஒலி)*

*நள்ளிரவிலே நடைபெற்ற அந்தக் கொள்ளைச் சம்பவத்திலே, அடுத்தடுத்து நடைபெற்றிருக்கக்கூடிய மரணங்கள், விபத்து மரணங்கள் போன்றவை அப்போதே மக்களிடையே சந்தேகத்தை ஏற்படுத்தியிருந்தன. அதனால்தான் அந்தக் கொள்ளை, கொலை வழக்குகள் விசாரிக்கப்பட்டு, "உண்மைக் குற்றவாளிகள் சட்டத்தின்முன்பு நிறுத்தப்படுவார்கள்" என்று ஏற்கெனவே தேர்தல் நேரத்திலே நாங்கள் வாக்குறுதி கொடுத்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)*

*அதனடிப்படையிலே, முறைப்படி நீதிமன்றத்திலே அனுமதி பெற்றுத்தான் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அரசியல் நோக்கத்தோடு அல்ல; முறைப்படி நீதிமன்றத்திலே அனுமதியைப் பெற்று, நீதிமன்றத்தினுடைய அனுமதியோடுதான் இந்த விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே, இதில் அரசியல் தலையீடோ, பழிவாங்குகிற எண்ணமோ நிச்சயமாக இல்லை. விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதிலே கிடைக்கக்கூடிய தகவலின் அடிப்படையில், நிச்சயமாக உண்மைக்*

[திரு. மு.க. ஸ்டாலின்] [2021 ஆகஸ்ட் 18

குற்றவாளிகள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமே தவிர, வேறு யாரும் இதற்காக அச்சப்பட வேண்டிய பயமோ, அவசியமோ இல்லை.

*முற்பகல் 10–05*

இந்த அரசு நிச்சயமாக சட்டத்தின் ஆட்சியை நடத்தும். ஆகவே, கொடநாடு வழக்கிலே, நீதிமன்றத்தின் அனுமதியோடு நடக்கும் விசாரணைக்கு, 'அரசியல் நோக்கத்தோடு' என்று ஒரு களங்கத்தைச் சுமத்தியிருக்கிறார்கள். 'அப்படியல்ல' என்பதைத் தெளிவுபடுத்துவதற்காகத்தான், நான் இந்த விளக்கத்தை இந்த அவையிலே எடுத்து வைத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் (குறுக்கீடு) ஒரு நிமிடம், நான் பதிவு செய்துவிடுகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் காலையிலேயே zero hour-ல் என்னிடம் எந்த அனுமதியும் கேட்காமல் இருக்கையிலிருந்து எழுந்தார்கள். எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் அவரை ஒரு நிமிடம் பேச அனுமதித்தோம். ஆனால், என்னிடம் குறிப்பிடாமல், ஒரு வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது, அதற்கு இடையூறாகப் பேசுவதைப் போன்று அவர்கள் அனைவரும் திட்டமிட்டு, பதாகைகளை என்னுடைய அனுமதி இல்லாமல், இந்த அவைக்குள் கொண்டுவந்து காட்டி, கூச்சல், குழப்பமிட்டு, வெளிநடப்புச் செய்திருக்கின்றார்கள். இது வன்மையாகக் கண்டிக்கக்கூடியது. இப்படிப்பட்ட நடைமுறைகள் இனிமேல் நடைபெறக் கூடாது என்று இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேபோல், இந்த அவையிலும் சரி, அவைக்கு வெளியிலிருந்தும், அவை நடைமுறைக்கு எதிராக கோஷங்களிடுவதை நான் கண்டிக்கிறேன். அவைக் காவலர்கள் அவர்களை அப்புறப்படுத்த வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கின்றேன். நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசிய அனைத்தும் அவைக் குறிப்பில் ஏறாது. அவை அனைத்தும் நீக்கப்படுகின்றன. பேரவை எல்லைக்குள் அவர்கள் நடந்துகொள்கின்ற முறை, இவை எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. இது தவறான முன்னுதாரணம்.

நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒன்றைக் குறிப்பிடுகின்றார்கள். என் அரசு என்றோ, எனது அரசு என்றோ சொல்லவில்லை. இது நமது அரசு என்று சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) நமது அரசு என்று சொல்லி கண்ணியத்தோடு

*2021 ஆகஸ்ட் 18]* [பேரவைத் தலைவர்]

*நடத்துகின்றார்கள். அதுமட்டுமல்ல; இந்தச் சட்டமன்றத்தினுடைய ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி... (குறுக்கீடு) லாபியில் அமர்ந்துகொண்டு சத்தம் போடுபவர்களையெல்லாம் வெளியேற்றும்படி அவைக் காவலர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். அதேபோன்று, மாண்புமிகு முதல்வர் அவர்கள் நமது அரசு என்று, வார்த்தை அளவில் சொல்லவில்லை. எதிர்க்கட்சி, ஆளுங்கட்சி, கூட்டணிக் கட்சி என்று அனைத்துக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களும் அரசு அறிவிக்கின்ற நலத் திட்டங்களை அதிகாரிகளோடும், மாவட்ட ஆட்சித்தலைவர்களோடும்சேர்ந்து கொடுக்கின்ற அந்த நிலையையும் உருவாக்கி, பெருந்தன்மையோடு நடந்துகொண்டிருக்கின்றார்கள். அதுமட்டுமல்ல, ஏற்கெனவே, இந்த மன்றம் கண்ணியமாக நடைபெற வேண்டும் என்பதற்காகவும், இழந்ததை மீண்டும் பெற வேண்டும் என்பதற்காகவும், சபை நாகரிகத்தோடு நடக்க வேண்டும் என்பதற்காகவும்தான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் எங்களுக்கெல்லாம் அறிவுறுத்தியிருக்கின்றார்கள். ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களைக்கூட, 'எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் தோழமைக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் மனம் புண்படும்படியாக எந்த வார்த்தைகளும் பேச வேண்டாம்; இந்த அரசினுடைய நல்ல திட்டங்களை வெளியே சொல்லுங்கள்' என்றுதான் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். இதை பலவீனமாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களெல்லாம் எண்ண வேண்டாம் என்பதை நான் இந்த நேரத்தில் பதிவு செய்துகொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவரின் அனுமதி இல்லாமல் நடைபெறும் இப்படிப்பட்ட சம்பவங்கள் இனிமேல் நடைபெறக் கூடாது. அவ்வாறு நடைபெற்றால், சரியான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள். (குறுக்கீடு) பேரவைக்கு வெளியே அவைக் காவலர்கள் என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்? உடனடியாக அவர்கள் அனைவரையும் வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் அனுமதி இல்லாமல் சபையினுள் அநாகரிகமாக நடந்துகொண்டதோடு மட்டுமல்லாமல், அவைக்கு வெளியேயும் அநாகரிகமாக நடந்துகொண்டிருக்கின்றார்கள். என்னுடைய அனுமதி இல்லாமல் கூக்குரலிட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இது அவை நாகரிகத்திற்கு*

எதிரான விஷயம். ஆகவே, உடனடியாக, அவைக் காவலர்கள் அவர்களை வெளியேற்றும்படி உத்தரவிடுகிறேன். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்ட பிரச்சினை என்பது முன்னாள் முதலமைச்சர், இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தப்பட்ட வழக்கு. இந்த வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது. இந்த வழக்கிற்குள் நான் செல்ல விரும்பவில்லை. இருந்தாலும்கூட, இந்தப் பிரச்சினை ஒரு முன்னாள் முதலமைச்சர் என்ற அளவிலேயும், இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் என்ற அளவிலேயும், இப்படிப்பட்ட நடவடிக்கைகள் முன்னுதாரணமாக அமைந்துவிடக் கூடாது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு வந்து, இந்த நடவடிக்கையைக் கைவிட வேண்டுமென்று அன்போடு கேட்டு, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் வெளிநடப்புச் செய்கிறோம்.

*முற்பகல் 10–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்களிடம் நான் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் இந்தத் தவறுக்கு உடந்தையாக இருக்க வேண்டாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தொடக்கத்திலேயே சொன்னேன். அரசியல் நோக்கத்தோடு, பழிவாங்குகிற நோக்கத்தோடு எடுக்கப்பட்ட நடவடிக்கை அல்ல. நீங்களே சொல்லியிருக்கிறீர்கள்; 'தேர்தல் நேரத்திலே சொன்ன உறுதிமொழிகள் என்னவாயிற்று? எதையும் நிறைவேற்றவில்லை, நிறைவேற்றவில்லை' என்று தொடர்ந்து நீங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே ஒன்றுதான் இது. இன்னும் பல விஷயங்கள் இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, நீதிமன்றத்தினுடைய direction–படி, நீதிமன்றத்தினுடைய உத்தரவின் அடிப்படையில்தான், நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதே தவிர, தனிப்பட்ட முறையில், அரசியல் நோக்கத்தோடு எடுக்கப்பட்ட நடவடிக்கை அல்ல என்பதை நம்முடைய பாட்டாளி மக்கள்

*2021 ஆகஸ்ட் 18]* *[திரு. மு.க. ஸ்டாலின்]*

*கட்சியினுடைய தலைவர், மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்களுக்கும் நான் இதை வலியுறுத்திக் குறிப்பிட்டுக் காட்டிட விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் கவனத்திற்கு, உங்கள் மனசாட்சிக்குத் தெரியும். இந்த வழக்கு இப்பொழுது ஆட்சியில் இருப்பவர்களால் போடப்பட்டதல்ல; ஏற்கெனவே A.I.A.D.M.K. ஆட்சியில் இருந்த காலத்தில் போடப்பட்ட வழக்கு. அதனுடைய தொடர் நடவடிக்கைதான் நடந்துகொண்டிருக்கிறதே தவிர, தனிப்பட்ட முறையில் நடக்கவில்லை என்பதை உங்கள் மனசாட்சியைத் தொட்டுப் பார்த்து, (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் ஆதரிக்க வேண்டுமா, எதிர்க்க வேண்டுமா என்பதை முடிவு செய்ய வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.*

*(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)*

**திரு. நயினார் நாகேந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நல்ல விளக்கத்தை அளித்தாலும்கூட, 100 நாட்களைத் தாண்டிய நிலையில் எல்லோருடைய ஆதரவையும் பெற்று நடைபெற்றுக்கொண்டிருக்கிறது நமது ஆட்சி. எதிர்க்கட்சித் தலைவர்மீது போடப்பட்டிருக்கிற வழக்கு நீதிமன்றத்தின் வாயிலாக இருந்தாலும், எல்லோருக்கும் ஓர் அச்சத்தை ஏற்படுத்துகின்ற இந்தச் சூழ்நிலையில், பாரதிய ஜனதா கட்சியினுடைய சார்பாக நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.*

*(பாரதிய ஜனதா கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுவதையும் கேட்ட பின்னர் செல்லுங்கள்.*

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரதிய ஜனதா கட்சியின் சட்டமன்றத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள், இது ஓர் அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்று சொல்கிறார். மடியிலே*

*கனமிருந்தால்தான் வழியிலே பயம் இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, யாரும் பயப்பட வேண்டியதில்லை; அச்சப்பட வேண்டிய அவசியமில்லை.*

## 2. திருத்திய வரவு—செலவுத் திட்டம் மற்றும் வேளாண்மை நிதிநிலை அறிக்கை, 2021—2022, பொது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2021–2022 ஆம் ஆண்டுக்கான திருத்திய நிதிநிலை அறிக்கை மற்றும் வேளாண்மை நிதிநிலை அறிக்கை ஆகியவற்றின்மீது பொது விவாதம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள். திரு. கே.பி. முனுசாமி அவர்கள் இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. உதயநிதி ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் மூவரையும் வணங்கி, என்னுடைய கன்னிப் பேச்சை இந்த அவையில் பதிவு செய்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரம்பரியமும், பெருமையும்மிக்க இந்தத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் பேசுவதற்கான வாய்ப்பை வழங்கியுள்ள உங்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பேரவை முன்னவர் தொடங்கி, மாண்புமிகு அமைச்சர்கள், கழகத்தின் மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்கள், தோழமைக் கட்சியின் உறுப்பினர்கள், இந்த நேரத்தில் நமது கூட்டணியின் வெற்றிக்காக உழைத்த தோழமைக் கட்சியின் தலைவர்கள், நம்முடைய ஆசிரியர் திரு. வீரமணி ஐயா அவர்கள், காங்கிரஸ் பேரியக்கத்தின் மாநிலத் தலைவர் அண்ணன் திரு. கே.எஸ். அழகிரி அவர்கள், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் அண்ணன் வைகோ அவர்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மாநிலச் செயலாளர் அண்ணன் ரா. முத்தரசன் அவர்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மாநிலச் செயலாளர் அண்ணன் பாலகிருஷ்ணன் அவர்கள், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் அண்ணன் திருமாவளவன் அவர்கள், இந்திய யூனியன்*